முழுப் பதிப்புரிமையுடையது

## இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2022 சனவரி

# (302) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

(Management Accounting and Finance)

2022-03-20
காலை
[08.45 – 12.00]

பக்கங்கள் : 11
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (**கவனமாக வாசிக்கவும்**):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்பட வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருந்தால் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரலில்*** *தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) ***கணித அட்டவணை*** *வழங்கப்படும்.*

(8) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

(a) முகாமைத்துவக் கணக்கீடு என்பது நிறுவன நோக்கங்களை நிறைவேற்றுவதில் உதவுகின்ற தகவல்களை அடையாளம் காணுதல், அளவீடு செய்தல், திரட்டுதல், பகுப்பாய்வு செய்தல், தயாரித்தல், விளக்கமளித்தல் மற்றும் தொடர்பாடல் செய்யும் செயன்முறையாகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

முகாமைத்துவக் கணக்கீடு, நிறுவனமொன்றிற்கு முக்கியமாகின்ற இரண்டு (02) வழிகளை (ways) **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட A கம்பனி** ஆனது **பொருள் Q** இனை உற்பத்தி செய்து, விற்பனை செய்கிறது. கீழ்வரும் தகவல்கள் **பொருள் Q** இன் நியம கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **அலகொன்றிற்கு (ரூபா)** |
|---|---|
| விற்பனை விலை | 85 |
| நேர் பொருள் | 40 |
| நேர் கூலி | 18 |
| மாறும் மேந்தலைகள் | 12 |

2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதிடப்பட்ட விற்பனை 100,000 அலகுகளாகவும் வருடாந்த பாதிடப்பட்ட நிலையான மேந்தலை ரூபா 1,440,000/- ஆகவும் உள்ளன.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக :**

(i) சமப்பாட்டுப் புள்ளி (BEP) – அலகுகளில். (02 புள்ளிகள்)

(ii) பாதுகாப்பு எல்லை (Margin of Safety) – அலகுகளில். (01 புள்ளி)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

கீழ்வரும் தகவல்கள் 2021 டிசெம்பர் 31 மற்றும் 2020 டிசெம்பர் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த நிதி ஆண்டுகளுக்கான **வரையறுக்கப்பட்ட டொட் கம்பனியின்** நிதிக் கூற்றுகளிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டுள்ளன :

| | **2021 (ரூபா)** | **2020 (ரூபா)** |
|---|---|---|
| விற்பனைகள் | 28,000,000 | 22,000,000 |
| விற்பனைக் கிரயம் | 24,640,000 | 18,150,000 |
| தொக்கு | 1,768,000 | 2,174,400 |
| வியாபார சென்மதிகள் | 9,898,000 | 7,350,000 |

- வியாபார வருமதிகள் புரள்வு விகிதம் 2.5 தடவைகள் என கணிப்பிடப்பட்டுள்ளது.
- சகல கொள்வனவுகளும் விற்பனைகளும் கடனடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் ஆண்டு ஒன்றிலுள்ள நாள்களின் எண்ணிக்கை 365 ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2021 ஆம் ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட டொட் கம்பனியின்** தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தைக் (length of the Working Capital Cycle) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட டிக் கம்பனி**யானது **பொருள் T** ஐ உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. நாட்காட்டி ஆண்டு 2021 இற்கான விற்பனை 180,000 அலகுகளாக இருந்ததுடன் இது 16 % சந்தைப் பங்கிற்கு சமனாக இருந்தது. 2022 ஆம் ஆண்டிற்கு 18 % சந்தைப் பங்கினைப் பிடிப்பதற்காக விற்பனையை அதிகரிப்பதற்கு விற்பனை முகாமையாளர் எதிர்பார்க்கிறார்.

2022 சனவரி 01 இல் ஆரம்ப முடிவுப் பொருள்களின் தொக்கு 11,000 அலகுகளாக இருந்ததுடன் ஆண்டிறுதியில் முடிவுப் பொருள்களின் தொக்கினைப் 2022 ஆம் ஆண்டினது சந்தைப் பங்கின் 10% இற்குச் சமமாகப் பேண கம்பனி எதிர்பார்த்துள்ளது. அலகொன்றிற்கான விற்பனை விலை 2021 இல் ரூபா 1,400/- ஆக இருந்ததுடன் 2022 இல் விலை 5 % இனால் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

2022 ஆம் ஆண்டிற்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) விற்பனைப் பாதீடு – அலகுகளிலும் பெறுமதியிலும். (03 புள்ளிகள்)

(b) உற்பத்திப் பாதீடு – அலகுகளில். (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட ஸீனா கம்பனி** அலகொன்று ரூபா 600/- விலையில் **பொருள் A** இன் 10,000 அலகுகளை வழங்கல் செய்வதற்கு வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து கட்டளையொன்றைப் பெற்றுள்ளது. இந்தக் கட்டளை தொடர்பில் கீழ்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

(1) கம்பனியின் தற்போதுள்ள கட்டளைகளுக்குப் பயன்படுத்த முடியாத, கிலோகிராம் ஒன்று ரூபா 125/- விலையில் கொள்வனவு செய்யப்பட்ட **பொருள் X** இன் 5,000 கிலோகிராம் மிகை இருப்பொன்று கம்பனியில் இருக்கிறது. **பொருள் A** இன் அலகொன்றை உற்பத்தி செய்வதற்கு **பொருள் X** இன் 2 கிலோகிராம் தேவைப்படுகிறது. அந்தக் கட்டளை ஏற்றுக்கொள்ளப்படுமாயின், தேவைப்படும் மீதி **பொருள் X** ஆனது சந்தையிலிருந்து கிலோகிராமொன்று ரூபா 160/- விலையில் கொள்வனவு செய்யப்பட வேண்டும்.

(2) **பொருள் A** இன் ஒரு அலகை உற்பத்தி செய்வதற்கு **பொருள் X** இற்கு மேலதிகமாக, **பொருள் Y** இன் 1 கிலோகிராம் தேவைப்படும் என்பதுடன் **பொருள் Y** இன் தற்போதைய இருப்பானது தற்போதுள்ள கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு மாத்திரமே போதுமானதாக இருக்கிறது. வாடிக்கையாளரின் கட்டளை ஏற்றுக்கொள்ளப்படுமாயின், கிலோகிராமொன்று ரூபா 150/- விலையில் **பொருள் Y** இனைக் கொள்வனவு செய்ய வேண்டியேற்படும்.

(3) இந்தக் கட்டளை உள்ளிட்ட தற்போதுள்ள சகல கட்டளைகளையும் நிறைவேற்றுவதற்கு திறமையான கூலி போதுமானதாக இருக்கிறது. எவ்வாறாயினும், இந்தக் கட்டளை ஏற்றுக்கொள்ளப்படுமாயின், கூலி மணித்தியாலமொன்றுக்கு 20% மேலதிக கூலி ஊக்கத்தொகையொன்று (incentive) செலுத்தப்பட வேண்டும். **பொருள் A** இன் அலகொன்றை உற்பத்தி செய்வதற்கு 2 மணித்தியால திறமையான கூலி கம்பனிக்குத் தேவைப்படும். கம்பனி தற்போது மணித்தியாலமொன்றிற்கு ரூபா 400/- என்ற வீதத்தில் திறமையான கூலிக்கான கொடுப்பனவை மேற்கொள்கிறது.

(4) இந்தக் கட்டளைக்காக அலகொன்றிற்கு ரூபா 20/- மாறும் மேந்தலை செலவு செய்யப்பட வேண்டும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

அவசியமான கணிப்பீடுகளைக் காட்டி, இந்தக் கட்டளை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமா அல்லது இல்லையா என்பதை **மதிப்பிடுக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட சுவீட் பொக்ஸ் கம்பனி** 3 வெவ்வேறு அளவுகளில் வகைப்படுத்தப்பட்ட இனிப்புப் பெட்டிகளைத் தயாரித்து, வாடிக்கையாளர்களின் இருப்பிடங்களுக்கே கொண்டு சென்று விநியோகம் செய்வதில் ஈடுபட்டுள்ளது. கீழ்வரும் தகவல்கள் 2022 இன் இரண்டாவது காலாண்டிற்காக வழங்கப்பட்டுள்ளன:

| | **ரூபா (அலகொன்றிற்கு)** | | |
|---|---|---|---|
| | **சிறிய** | **ஆடம்பரமான** | **உயர்ந்த** |
| நேர் பொருள் | 800 | 1,900 | 2,800 |
| திறமையான கூலி (மணித்தியாலத்திற்கு ரூபா 1,000/- வீதம்) | 800 | 1,100 | 1,500 |
| பொதியிடும் தாளின் கிரயம் (சதுர மீற்றர் ஒன்று ரூபா 400/- வீதம்) | 160 | 240 | 360 |
| விநியோகக் கிரயம் (கிலோகிராம் ஒன்றுக்கு ரூபா 200/- வீதம்) | 200 | 300 | 500 |
| ஏனைய மாறும் மேந்தலைகள் | 150 | 200 | 250 |
| விற்பனை விலை | 2,600 | 4,400 | 6,500 |

| | | | |
|---|---|---|---|
| காலாண்டு ஒன்றிற்கு பாதிடப்பட்ட விற்பனை (அலகுகளில்) | 1,000 | 600 | 200 |

2022 ஆம் ஆண்டிற்கான காலாண்டு நிலையான மேந்தலைகள் ரூபா 150,000/- ஆக இருக்கும்.

2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டிற்கு கிடைக்கக்கூடிய வளங்கள் கீழ்வருமாறு மதிப்பிடப் பட்டுள்ளன :

| | | |
|---|---|---|
| திறமையான கூலி | 1,900 | மணித்தியாலங்கள் |
| பொதியிடும் தாள் | 1,000 | சதுர மீற்றர்கள் |
| விநியோக எடை | 2,200 | கிலோகிராம் |

***நீங்கள் செய்யவேண்டியவை :***

(a) ஆதரவான கணிப்பீடுகளைக் காட்டி, வரையறைக் காரணி /காரணிகளை **இனங்காண்க.**

(04 புள்ளிகள்)

(b) இனங்காணப்பட்ட வரையறைக் காரணி / காரணிகளின் அடிப்படையில் உத்தம உற்பத்திக் கலவையைக் **கணிப்பிடுக.**

(06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட வொண்டர் கம்பனி** குழந்தைகளுக்கான விளையாட்டுக் கார்களைத் தயாரித்து, இணையம் ஊடாக விற்பனை செய்கிறது. கீழ்வரும் தகவல்கள் **வரையறுக்கப்பட்ட வொண்டர் கம்பனி** தொடர்பாகக் கிடைக்கப் பெற்றுள்ளன :

(1) விளையாட்டுக் கார் ஒன்றின் விற்பனை விலை ரூபா 800/- என்பதுடன் விளையாட்டுக் கார்களை விநியோகிக்கும் போதே காசு வசூலிக்கின்ற அடிப்படையில் அல்லது விநியோகிப்பதற்கு முன்னர் வங்கி மாற்றல்கள் ஊடாக பணம் செலுத்துமிடத்து அத்தகைய வங்கி மாற்றல் இடம்பெற்று ஒரு நாளிற்குள் விநியோகம் செய்யப்படுகின்ற அடிப்படையில் விற்பனைகள் இடம்பெறுகின்றன.

(2) 2022 பெப்ரவரி தொடக்கம் யூலை மாதம் வரையான மாதங்களுக்கான விற்பனைகள் மற்றும் உற்பத்தி ஆகியன கீழ்வருமாறு திட்டமிடப்பட்டுள்ளன :

| | **பெப்ரவரி** | **மார்ச்** | **ஏப்ரல்** | **மே** | **யூன்** | **யூலை** |
|---|---|---|---|---|---|---|
| **விற்பனைகள் (அலகுகள்)** | 2,000 | 3,000 | 1,500 | 800 | 1,400 | 2,000 |
| **உற்பத்தி (அலகுகள்)** | 2,500 | 2,200 | 700 | 1,600 | 1,800 | 1,000 |

(3) அலகொன்றின் மொத்த மூலப்பொருள் கிரயம் ரூபா 300/- ஆக இருப்பதுடன் விளையாட்டுக் கார்களுக்குப் பயன்படுத்தப்படுகின்ற மூலப்பொருள்கள் பிரதானமாக உள்ளூர் சந்தையிலிருந்து கொள்வனவு செய்யப்படுகின்ற துணி மற்றும் ஏனைய துணைப்பொருள்களாகும். அலகொன்றிற்கான துணியின் கிரயமானது அலகொன்றிற்கான மொத்த மூலப்பொருள் கிரயத்தின் 60% ஆக இருப்பதுடன் மீதி துணைப் பொருள்களுக்கானவை ஆகும். துணியானது 60 நாட்கள் கடன் காலப்பகுதியொன்றுடன் வழங்குநர் ஒருவரிடமிருந்து வாங்கப்படுகின்ற அதே வேளை துணைப் பொருள்கள் 30 நாள்கள் கடன் காலப்பகுதியுடன் கொள்வனவு செய்யப்படுகின்றன. மூலப் பொருளானது அந்தந்த மாதத்திற்கான உற்பத்தித் தேவைகளைக் கவனத்திற் கொண்டு ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் கொள்வனவு செய்யப்படுகிறது.

(4) கூலியானது தைத்தல் மற்றும் வர்ணம் பூசுவதை உள்ளடக்கியுள்ளது. இங்கு தைத்தல் பணியானது ஒவ்வொரு மாத இறுதியிலும் கொடுப்பனவை மேற்கொள்ளும் விதமாக வீட்டிலிருந்து வேலை செய்யும் பல பெண்களிடம் ஒப்படைக்கப்படுகிறது (Outsourced). கம்பனியானது விளையாட்டு கார் ஒன்றைத் தைப்பதற்காக ரூபா 200/- ஐச் செலவு செய்கிறது. வர்ணம் பூசும் பணியானது ஒவ்வொரு மாத இறுதியிலும் மாதமொன்றிற்கு ரூபா 80,000/- நிலையான சம்பளம் செலுத்தப்படுகின்ற கம்பனியின் 2 ஊழியர்களால் கையாளப்படுகிறது.

(5) மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி உள்ளிட்ட ஏனைய மேந்தலைகள் மாதமொன்றிற்கு ரூபா 45,000/- ஆக இருப்பதுடன் அவை பயன்படுத்தப்பட்ட மாதத்திற்கு அடுத்துவரும் மாதத்தில் அவற்றுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

(6) கம்பனியானது 2022 மே மாதத்தில் அலுவலகப் பாவனைக்காக ரூபா 230,000/- கிரயத்தில் கணினி ஒன்றைக் கொள்வனவு செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது.

(7) 2022 ஏப்ரல் 01 இல் ஆரம்ப காசு மீதி ரூபா 500,000/- ஆக இருக்கும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2022 ஏப்ரல், மே மற்றும் யூன் மாதங்களுக்கான காசுப் பாதீட்டைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 07

**ஹோல்ட் PLC** என்பது கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடப்பட்ட ஒரு கம்பனியாகும். கீழ்வரும் தகவல்கள் **ஹோல்ட் PLC** இன் நிதிக் கூற்றுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) **ஹோல்ட் PLC** 60 மில்லியன் சாதாரண வாக்குரிமைப் பங்குகளை விநியோகத்தில் கொண்டிருப்பதுடன் அந்தப் பங்கொன்று ரூபா 16/- என்ற சந்தை விலையில் வர்த்தகம் செய்யப்படுகிறது. கம்பனி, பங்கொன்றிற்கு ரூபா 2.40 என்ற நிலையான பங்கிலாபமொன்றைச் செலுத்துகிறது.

(2) கம்பனி 10 மில்லியன் மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளை விநியோகத்தில் கொண்டிருப்பதுடன், ஆரம்பத்தில் பங்கொன்று ரூபா 10/- வீதம் விநியோகிக்கப்பட்ட இந்தப் பங்கொன்றின் தற்போதைய சந்தை விலை ரூபா 12/- ஆகும். பங்கொன்றின் வருடாந்தப் பங்கிலாபம் ரூபா 1.50 ஆகும்.

(3) கம்பனியானது ஆண்டொன்றிற்கு 12% கூப்பன் வீதமொன்றுடன் தனிச்சமொன்று ரூபா 100/- விலையில் 5 மில்லியன் பட்டியலிடப்பட்ட மீட்கத்தக்க தனிச்சங்களை விநியோகித்துள்ளது. தனிச்சமொன்றின் தற்போதைய சந்தை விலை ரூபா 112/- ஆக இருப்பதுடன் தனிச்சங்கள் 5 ஆண்டுகளில் மீட்கப்படும்.

(4) கம்பனியானது 24% இல் வருமான வரி செலுத்துவதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(b) மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(c) மீட்கப்படத்தக்க தனிச்சங்களின் கிரயம் (03 புள்ளிகள்)

(d) சந்தைப் பெறுமதிகளைப் பயன்படுத்தி, நிறையேற்றப்பட்ட சராசரி மூலதனக் கிரயம் (WACC) (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட எக்ஸர் கம்பனி பொருள் D** இனைத் தயாரித்து விற்பனை செய்கிறது. கீழ்வரும் தகவல்கள் நியம கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **அலகொன்று (ரூபா)** |
|---|---:|
| நேர் பொருள் (கிலோகிராமொன்று ரூபா 800/- விலையில் 1.2 கிலோகிராம்) | 960 |
| நேர் கூலி : | |
| **தரம் 1** கூலி (மணித்தியாலமொன்றுக்கு ரூபா 170/- வீதம் 1 மணித்தியாலம்) | 170 |
| **தரம் 2** கூலி (மணித்தியாலமொன்றுக்கு ரூபா 75/- வீதம் 2 மணித்தியாலங்கள்) | 150 |
| மாறும் மேந்தலைகள் (மணித்தியாலமொன்றுக்கு ரூபா 40/- வீதம்) | 120 |
| **மொத்த மாறும் கிரயம்** | 1,400 |
| விற்பனை விலை | 1,700 |
| **பங்களிப்பு** | 300 |

பாதிடப்பட்ட வருடாந்த விற்பனை 8,000 அலகுகள் என்பதுடன் ஆண்டிற்கான உண்மையான விற்பனை / உற்பத்தி 7,560 அலகுகளாகும். 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உண்மையான செயலாற்றுகையானது முகாமையால் கணிக்கப்பட்டுள்ள முரண்களுடன் சேர்த்து கீழே தரப்பட்டுள்ளது :

| **2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உண்மைத் தகவல்கள்** | **(ரூபா)** | |
|---|---:|---|
| விற்பனை வருமானம் (7,560 அலகுகள்) | 12,700,800 | |
| நேர் பொருள் (8,921 கிலோகிராம்) | 7,047,432 | |
| நேர் கூலிக் கிரயம் : | | |
| **தரம் 1** கூலி (7,540 மணித்தியாலங்கள்) | 1,327,040 | |
| **தரம் 2** கூலி (15,800 மணித்தியாலங்கள்) | 1,137,600 | |
| மாறும் மேந்தலைகள் | 1,003,620 | |
| நிலையான மேந்தலைகள் | 2,763,500 | |
| நேர் பொருள் விலை முரண் | 89,368 | சாதகமானது |
| நேர் பொருள் பாவனை முரண் | 120,800 | சாதகமானது |
| மாறும் மேந்தலை செலவின முரண் | 70,020 | பாதகமானது |
| மாறும் மேந்தலை வினைத்திறன் முரண் | 26,400 | பாதகமானது |
| விற்பனை எல்லை கனவளவு முரண் | 132,000 | பாதகமானது |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) கீழ்வரும் முரண்களைக் **கணிக்குக** :

(i) விற்பனை விலை முரண் (02 புள்ளிகள்)

(ii) நேர் கூலி வீத முரண் (02 புள்ளிகள்)

(iii) நேர் கூலி கலவை முரண் (03 புள்ளிகள்)

(iv) நேர் கூலி விளைவு (உற்பத்தித்திறன்) முரண் (03 புள்ளிகள்)

(b) உண்மையான பங்களிப்புடன் பாதிடப்பட்ட பங்களிப்பை இணக்கம் செய்வதற்கான தொழிற்பாட்டுக் கூற்றொன்றைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 09

25 வயதிற்குக் கீழ்ப்பட்ட இளம் பராயத்தினரை இலக்கு வைத்து புத்தாக்கமான சாதனமொன்றை விருத்தி செய்து விற்பனை செய்வதில் ஈடுபடுகின்ற **வரையறுக்கப்பட்ட இமோ கம்பனி**யானது ஒரு புதிய செயற்றிட்டத்தில் முதலீடு செய்வது பற்றிப் பரிசீலிக்கிறது. இதன் பொருட்டு, ஒரு விசேட இயந்திரத்திற்காக ரூபா 125 மில்லியனை முதலீடு செய்யவும் தொழிற்படு மூலதனத் தேவைக்காக ரூபா 3 மில்லியனை முதலீடு செய்யவும் கம்பனி எதிர்பார்க்கிறது.

அடுத்த 5 ஆண்டுகளுக்கு, விற்பனை மற்றும் விளம்பரப்படுத்தல் கிரயங்கள் கீழுள்ளவாறு இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது :

| **ஆண்டு** | **உற்பத்தி / விற்பனை (அலகுகள்)** | **அலகொன்றின் விற்பனை விலை (ரூபா)** | **ஆண்டொன்றிற்கான விளம்பரப்படுத்தல் கிரயம் (ரூபா)** |
|---|---|---|---|
| 1 | 7,500 | 11,000 | 8,000,000 |
| 2 | 11,000 | 10,500 | 23,000,000 |
| 3 | 18,000 | 9,500 | 15,000,000 |
| 4 | 20,000 | 9,000 | 15,000,000 |
| 5 | 15,000 | 8,500 | 4,000,000 |

இயந்திரத்தின் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாக இருப்பதுடன் கம்பனி அதன் இயந்திரங்களை கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்கிறது. கம்பனி இயந்திரம் மீது ஆண்டிற்கு 25% இல் மூலதன விடுதொகையைக் கோருவதற்கு (claim) உரித்துடையதாகும்.

விளம்பரப்படுத்தல் கிரயம் தவிர்ந்த மாறும் உற்பத்திக் கிரயமானது அலகிற்கு ரூபா 4,000/- ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் இயந்திரம் மீதான தேய்மானம் உள்ளிட்ட நிலையான மேந்தலைக் கிரயம் ஆண்டிற்கு ரூபா 37 மில்லியனாக இருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. தொழிற்படு மூலதனத்தை 5 ஆவது ஆண்டின் இறுதியில் மீட்க முடியும்.

கம்பனி ஆண்டிற்கு 24% இல் வருமான வரி செலுத்துவதுடன் அது அதே ஆண்டில் செலுத்தப்பட வேண்டும்.

**வரையறுக்கப்பட்ட இமோ கம்பனியின்** மூலதனக் கிரயம் ஆண்டிற்கு 10 % ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) புதிய செயற்றிட்டத்தின் நிகர இற்றைப் பெறுமதியைக் (NPV) **கணிக்குக.** (13 புள்ளிகள்)

(b) NPV இன் அடிப்படையில் மேற்படி செயற்றிட்டத்தின் சாத்தியத்தன்மையை (viability) **மதிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 10

(A) **வரையறுக்கப்பட்ட XY கம்பனி** பல செயன்முறைகள் ஊடாக **பொருள் Z** இனைத் தயாரிக்கிறது. கீழ்வரும் தகவல்கள் 2021 டிசெம்பர் மாதத்திற்கான **பொருள் Z** தொடர்பாகக் கிடைக்கப் பெற்றுள்ளன:

| | |
|---|---|
| **செயன்முறை I** இலிருந்து மாற்றப்பட்ட உள்ளீடு (8,000 லீற்றர்) | ரூபா 1,520,640/- |
| நேர் கூலி | ரூபா 1,320,760/- |
| மாறும் மேந்தலைகள் | ரூபா 534,650/- |
| வெளியீடு | 6,230 லீற்றர் |
| சாதாரண இழப்பு | **செயன்முறை I** இலிருந்து மாற்றப்பட்ட உள்ளீட்டின் 4%. இதனை லீற்றரொன்று ரூபா 60/- விலையில் விற்க முடியும். |

மாத இறுதியில், கீழ்வரும் பூர்த்தி மட்டங்களுடன் 650 லீற்றர் இறுதி புத்துருவாகும் வேலைகள் காணப்பட்டன :

| | | |
|---|---|---|
| **செயன்முறை I** இலிருந்து மாற்றப்பட்ட உள்ளீடு | : | 100% |
| நேர் கூலி | : | 60% |
| மாறும் மேந்தலைகள் | : | 30% |

**நீங்கள் செய்யவேண்டியது :**

சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றையும் **செயன்முறை II** கணக்கையும் **தயாரிக்குக.**

(14 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட வின் கம்பனி** ஒரு புதிய பொருளை அறிமுகப்படுத்துவது பற்றிக் கவனம் செலுத்துகிறது. இந்தப் பொருளுக்கான கேள்வி உயர்வாகவோ, நடுத்தரமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. கம்பனி புதிய பொருளை விற்பனை செய்வதற்கான சிறந்த தெரிவைத் தேர்வு செய்வதற்காக 2 தெரிவுகள் (உள்ளக விற்பனை அணியினரைப் பயன்படுத்துதல் அல்லது வெளிவாரியான விற்பனை அணியினரை வாடகைக்கு அமர்த்துதல்) பற்றிக் கவனத்தில் கொள்ள திட்டமிடுகிறது. ஒவ்வொரு கேள்வி மட்டத்திற்குமான விற்பனைக் கணியமும் நிகழ்தகவும் கீழ்வருமாறு :

| **தெரிவு** | | **விற்பனை அலகுகள்** | **நிகழ்தகவு** |
|---|---|---|---|
| உள்ளக விற்பனை அணியினரைப் பயன்படுத்துதல் | உயர் | 500,000 | 0.2 |
| | நடுத்தரம் | 380,000 | 0.5 |
| | குறைவு | 290,000 | 0.3 |
| வெளிவாரியான விற்பனை அணியினரை வாடகைக்கு அமர்த்துதல் | உயர் | 500,000 | 0.3 |
| | நடுத்தரம் | 380,000 | 0.55 |
| | குறைவு | 290,000 | 0.15 |

பொருளின் ஆயுள் சுற்று (life cycle) 4 ஆண்டுகளுக்கு நீடிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. விற்பனை விலையானது பொருளின் ஆயுட்காலம் நெடுகிலும் அலகொன்று ரூபா 150/- ஆகத் தொடர்ந்தும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆண்டிற்கான நிலையான கிரயம் ரூபா 450,000/- என்பதுடன் அலகொன்றிற்கான மாறும் உற்பத்திக் கிரயம் ரூபா 45/- ஆக இருக்கு மெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

உள்ளக விற்பனை அணியினருக்கான விற்பனைப் பணிசையானது (தரகு) விற்பனைப் பெறுமதியில் 3% ஆகும். பொருளை விற்பனை செய்வதற்காக வெளிவாரியான விற்பனை அணியினர் வாடகைக்கு அமர்த்தப்பட்டால், விற்பனைப் பணிசையானது விற்பனைப் பெறுமதியில் 5% ஆக இருக்கும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

ஆதரவான கணிப்பீடுகளைக் காட்டி, புதிய பொருளை விற்பனை செய்வதற்கு வெளிவாரியான விற்பனை அணியினரை வாடகைக்கு அமர்த்த வேண்டுமா அல்லது உள்ளக விற்பனை அணியினரைப் பயன்படுத்த வேண்டுமா என்பதை **மதிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |